# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE, TENKASI.

## MCOP.No. 26/2022

Name : திரு. வைரமுத்து **Rw1**

Father's Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 29th day of October 2025.

**முதல் விசாரணை**

நான் 2ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தில் உதவி மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் எனது நிரூபண வாக்குமூலத்தை இன்று தாக்கல் செய்கிறேன். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். நான் அதை படித்து பார்த்துதான் கையொப்பம் இட்டுள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொன்னவை தான். அத்துடன் 1 ஆவணத்தை தாக்கல் செய்கிறேன். அது விபத்து சம்பந்தமான கடையம் காவல்நிலைய குற்ற எண். 488/2021ல் தயார் செய்த குற்ற அறிக்கையின் நகல் **எ.ம.சா.ஆ-1** ஆகும். 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

**மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை .**

விபத்து சமயத்தில் TN-59-L-4506 வாகனத்திற்கு எங்கள் காப்பீடு கழகத்தில் செய்யப்பட்ட காப்பீடு ஊர்ஜிதத்தில் இருந்தது என்றால் சரிதான். எங்கள் நிறுவனத்தை பொறுத்தவரை மனுதாரர் 3ம் தரப்பினர் என்றால் சரிதான். மேற்படி வாகனம் விபத்தில் ஈடுபட்டது உண்மைதான் என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் அவர் ஓட்டி சென்ற வாகனத்தை சாலைவிதிகளை கடைபிடித்து இயக்கியிருந்தால் மேற்படி விபத்து ஏற்பட்டிருக்காது என்று சொன்னால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால்தான் விபத்து ஏற்பட்டது என்றும், எனவே நாங்கள் மனுதாரருக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளோம் என்றால் சரியல்ல.

**(5ம் எதிர்மனுதாரர் தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணை ஏற்கப்படுகிறது)**

**3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை .**

விபத்து சம்பந்தமாக எனக்கு நேரடியாக விவரம் தெரியாது என்று சொன்னால் சரிதான், ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் 3ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால்தான் விபத்து ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. விபத்தில் சம்பந்தப்பட்ட TN-59-L-4506 பதிவெண் கொண்ட டெம்போ டிராவலர் எங்கள் காப்பீட்டு கழகத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி டெம்போ டிராவலரின் ஓட்டுநரின் கவனக்குறைவால்தான் மேற்படி விபத்து ஏற்பட்டது என்றும், எனவே மனுதாரர்களுக்கு எங்கள் காப்பீட்டு கழகம்தான் இழப்பீடு வழங்கவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District Judge, Tenkasi